
# விஞ்ஞானப் பூக்கள்

அக்டோபர் 2013






## THE M.D.T.







## HINDU COLLEGE



மதுரை திரவியம் தாயுமானவர் இந்துக் கல்லூரி
திருநெல்வேலி - 10.

Scanned with CamScanner






செயலர் ஏ.எல்.எஸ். கூட்ட அரங்கம்
திறப்பு விழா 05.09.2013 அன்று இனிதே நடைபெற்றது.

# மதுரை திரவியம் தாயுமானவர் இந்துக் கல்லூரி

திருநெல்வேலி - 10.

(தனிச்சுற்றுக்கு மட்டும்)

## விஞ்ஞானப்பூக்கள்



இதழ் - 9

அக்டோபர் - 2013

அறிவியல் உணர்வு - சமுதாயத் தேவை
அறிவியல் நோக்கு - சமுதாய வளர்ச்சி

Scanned with CamScanner

## மலர்க்குழு உறுப்பினர்கள்

| பேராசிரியர்கள் | துணையாய் மாணவர்கள் | |
|---|---|---|
| | **இயற்பியல்** | |
| பேரா.N.ஆறுமுகச்சாமி | E.இசக்கி | III B.Sc. Physics |
| | E.சித்ரா | II M.Sc. Physics |
| | **வேதியியல்** | |
| பேரா. S. கவிதா | செல்வகுமார் | III B.Sc Chem |
| | **கணிப்பொறியியல்** | |
| பேரா. P. வேல்மணி | S. பொன்னம்மாள் | II B.Sc C.S. |
| | **கணிதத் துறை** | |
| பேரா. K. முருகன் | T. ராஜ ராஜேஸ்வரி | II M.Sc Maths |
| | K.வைதீஸ்வரி | II B.Sc Maths |
| | **விலங்கியல் துறை** | |
| பேரா. A. சிவகுருநாதன் | M. சசிகுமார் | III B.Sc Zoo |
| | **உடற்கல்வித் துறை** | |
| பேரா. J. கார்த்திகேயன் | S. ரஞ்சித்குமார் | III B.Sc Phs |

**உறுதுணையாய்**

**Dr. P. சின்னத்தம்பி**

**முதல்வர், ம.தி.தா. இந்துக் கல்லூரி**



### மாணவர்களின் சிந்தனைக்கு

மாணவர்கள் ஆர்வமுடன் பங்கு பெறும் இதழே உயிரோட்டமுள்ளதாக விளங்க முடியும். உங்கள் தனித் திறமையை வளர்த்துக் கொள்ளும் களமாக இந்த இதழை எடுத்துக் கொள்ளுங்கள். தனிப்பட்ட கண்ணியமான தோற்றம், இனிமையான பேச்சு, மனித உறவுகளை மேம்படுத்துதல் ஆகியவை ஒருவருடைய ஆளுமைத் திறனை வளர்த்தெடுக்கும் அத்தகைய ஆளுமைத் திறனை வளர்ப்பவர்களே வாழ்கையில் வெற்றியாளர்களாக உள்ளார்கள் என்பதை எப்பொழுதும் உங்கள் சிந்தனையில் கொள்ளுங்கள்.

நம்மைச் சுற்றி நடக்கும் அனைத்து நற்செயலிலும் ஒவ்வொருவரும் பங்களிக்க முயற்சிக்க வேண்டும். வெற்றி ஒரு வெறியைத் தரும். அவ்வெறியே உந்து சக்தியாகவும் விளங்கும்.

அமெரிக்க கலைக் களஞ்சியத்தின் தலைமை ஆசிரியர் மார்ட்டிமர் ஆட்லர். அவர் "உலகின் ஆறு உண்மைகள்" என்றொரு புத்தகத்தை எழுதியுள்ளார். அதில் கூறப்பட்டுள்ள ஆறு உண்மைகள் - சுதந்திரம், சமத்துவம், ஒழுக்கம், நேர்மை, உண்மை, நல்லெண்ணம் என்பவை தான்.

நம் ஒவ்வொருவரிடமும் இருக்க வேண்டிய குணங்கள். குறிப்பாக சொந்தக் காலில் நிற்க விரும்புவர்களிடம் இருக்க வேண்டிய அடிப்படைப் பண்புகள் இவை.

**எண்ணங்களில் கவனம் வையுங்கள்**
**அவை சொற்களாகின்றன**
**சொற்களில் கவனம் வையுங்கள்**
**அவை செயல்களாக மலர்கின்றன**
**செயல்களில் கவனம் வையுங்கள்**
**அவை பழக்கங்களாகப் பழகின்றன**
**பழக்கங்களில் கவனம் வையுங்கள்**
**அவை உங்கள் வாழ்வைத் தீர்மானிக்கின்றன**
**நல்வாழ்வு - நம் வாழ்வு - நம் கையில்**

**மலர்க்குழு**

## பசுவின் பெருமைகள்



நம் நாட்டில் தெய்வமாக வணங்கப்படும் பசு, உழவுத் தொழிலுக்கு மிகப் பெரிய அளவில் பயன்படக்கூடியது.

பசுவை வாழ்வின் இயற்கையான ஓர் ஆய்வுக்கூடம் என்றும் கூறலாம். ஆயுர்வேதத்தில் தாயின் பாலுக்குப் பிறகு பசுவின் பால் மிக உயர்ந்ததாக கருதப்படுகின்றது. ஆயுர்வேத மருந்துகளிலும் பெரும்பாலும் பசுவின் பாலும், பசுவின் நெய்யும் தான் உபயோகிக்கப்படுகின்றன. பசுவிடமிருந்து பெறப்படும் பால், தயிர்,நெய், கோமூத்திரம், கோமயம்(சாணம்) ஆகியவைகள் தான் பஞ்ச கவ்யங்களாகக் கருதப்படுகின்றன. பசுந்தயிர், பசும்பால், பசுநெய், அருந்துவதால் உடல் நிலை மேம்படும். நோய் வாய்ப்பட்டாலும் உடனே நோயிலிருந்து விடுபட்டு விடலாம்.

அதிக பால் தரும் பசுக்களாக கருதப்படும் ஜெர்சி போன்ற கலப்பின பசுக்களின் பாலில் வெறும் கொழுப்பு மட்டுமே அதிகமாக உள்ளது. நமது பாரம்பரியமான திமிலுடைய நாட்டுப் பசுக்களே இத்தகு பெருமைகளுக்கு காரணமுடையவை. நாட்டுப் பசுக்களின் பால், தயிர், நெய், கோமூத்திரம், சாணம் போன்றவற்றின் பெருமையை இயன்ற அளவில் இங்கு விரிவாக்கம் செய்ய முயல்கிறேன்.

<u>பாலின் மற்ற பெயர்கள்:-</u> பயம், அமுதம், பியூஷம், ஷீரம், சௌம்யம், ஸ்வாரி, சாத்ம்ய

**வடமொழி :- மராட்டி - தூத்; ஹிந்தி - தூத்**

**ஆங்கிலம் :- மில்க் ; இலத்தீன் :- லேக்டஸ்**

**குணாதிசயங்கள் :- கெட்டித்தனம் உண்டாக்கக் கூடியது**

**குளிர்ந்த உடல், வலிமையுள்ளது. வாயுவை கட்டுப்படுத்தக் கூடியது. கபத்தை உண்டு பண்ணக் கூடியது. ரத்தத்தில் பித்தத்தை குறைக்கக் கூடியது.**



பசும்பால் சாப்பிட்டால் கீழ்க்கண்ட வியாதிகள் நீங்க உதவியாக இருக்கும்.

1. பலவிதமான மனோவியாதிகள், உணர்ச்சி வேகம்.
2. வலிப்பு வியாதி, அடஸ்மாரம் (Epilepsy)
3. மன அழுத்தம் (Depression)
4. நாள்பட்ட ஜுரம் (Chronic fever)
5. மூட்டு வியாதி (Gout)
6. மலமிருக்க நோய் (Constipation)
7. மூல வியாதி (Piles)
8. இரத்த குறைவு, பலவீனம் (Anemia, General debility)
9. உணவுப்பாதை சளிநோய் (Sprue)
10. உதர குலம் (Sprue, Dysentry)
11. வாய்வு (Gas)
12. இரத்த பித்தம் (மூக்கு, வாய் போன்றவைகளிலிருந்து இரத்தம் கொட்டுதல்) (Epistaxis)
13. பெண்ணுறுப்பு வியாதிகள், கர்ப்பப்பை இரத்தக்கசிவு
14. எலும்பு முறிவு (Fracture)
15. காசநோய் (T.B)

தாய்ப்பாலைத் தவிர மற்ற பால்களை சுட வைத்து பருக வேண்டும். குழந்தைகள், வயதானவர்கள், பலவீனமாக உள்ளவர்கள் பசும்பால் பருகினால் அது உத்தமமாக இருக்கும்.

இன்னும் பசுவின் நெய், தயிர்,கோமூத்திரம், சாணம் என ஒவ்வொன்றின் பலன்களையும் வரிசைப்படுத்த இயலும். பக்கங்கள் போதாத காரணத்தால் இதுவரை தந்ததை உங்கள் சிந்தனைக்கு விடுகிறேன்.

பசுவினம் காப்போம் - மண்வளம் காப்போம்
மண்வளம் காப்போம் - விவசாயம் காப்போம்
விவசாயம் காப்போம் - தேசம் காப்போம்
தேசம் காப்போம் - உலகம் காப்போம்.

இ.தங்கராஜ் (எ) கார்த்திக்
II B.Sc Physics

## Namaz and Yoga

**What is namaz?**

In Arabic, Namaz is known as 'salaut' which is derived from 'Silaa' meaning 'meeting'. Thus namaz means meeting Allah; That is during namaz man's submission and God's acceptance take place. This namaz, formulated by the great Prophet Mohammed, under the inspiration of God has to be prayed 5 times a day; 1. Before sunrise, 2. at noon, 3. between noon and sunset, 4. and sunset, 5. after sunset and before bed time?

Namaz consists of rakaats, each rakaats being a series of 7 posture. For example, before sunrise, 2 rakaats or 14 postures must be performed. Thus each muslim is under obligation to perform 119 postures per day, that is 3750 posture per month and 42,840 per year. Suppose, if we live up to an average of 50years, namaz being obligatory from the age of 10 years, We would have performed 17,13,600 postures compulsorily in life time.

Thus, if a muslim practises namaz strictly and properly, he will be automatically fit and sound physically, mentally and spiritually. In this respect All Quran (29: 45) says. "Innas salata Tanha fhasyaye valmunkar" Which is rendered in English as : "Neither ill feeling nor unhealthy thought can occupy the mind of a namazee."

**B. The synthesis of Namaz and Yoga**

Namaz, if performed strictly according to the tenets of islam, will not only lead the namazee to experience spiritual upliftment, but will also maintain physical fitness and mental peace.



At this juncture it dawned upon my mind, like an in sight, that namaz postures are similar to yogic postures and therefore namaz, while being performed as a religious obligation, can simultaneously give the namazee all the benefits of yoga. 7 postures of namaz are the simplified and condensed versions of yogic posture in their external and internal qualities.


This discovery can be made use of for furhering the national integration. In certain parts of India, communal riots between Hindus and muslims are often reported. If we can succeed in making these two communities understand that the basic principles of yoga associated with Hinduism are also the namazessence of namaz and of Islam, ther they will give up looking at each other with enmity and begin to treat one another as brothers.

**Seven postures of Namaz**



*M. Thakkarai Riyaz Mydeen*
*C. Selvakumar*
*III B.Sc Physical Education*

## Balanced Diet for Young Athletes




This is the basic phymed Structure. The Athlete Should follow the diet structure for better performance

**S. Sundar**
**S. Sudalai Suresh**
*II B.Sc. Phy. Edu.*

### Life and Physics

Life is like Physics
Build your life as a circuit
Connect a battery at heart
Pass a current at affection
Let it be in milliampers
Measure your thoughts by an ammeter
Adjust your tension with a rheostat
Have resistance towards evil thoughts
calculate the solutions of life.

***K. Dhanasekar***
*II B.Sc Physics*



## *வர்மக்கலை*

வர்மக்கலை தோன்றிய காலம்

வர்மக்கலை தோன்றியதற்கு காரணம் ஈசன் ஆகும். மர்மம் என்ற சொல்லே வர்மம் என்று மருவி வழங்குகிறது. வர்மக்கலை நமது நாட்டில் எப்போது தோன்றியது என்று அறுதியிட்டுக் கூற முடியாது. புராண இதிகாச காலங்களிலேயே வீரர்கள் எதிரியின் வர்ம ஸ்தானங்களை நோக்கி அம்புகளை எய்தார்கள். ஈட்டிகளால் தாக்கினார்கள் கதையால் அடித்தார்கள் என்றெல்லாம் வருவதைக் காணலாம். இதற்கு முறையான உருவம் கொடுக்கப்பட்ட காலத்தை அறிவதற்கு எந்த விதமான ஆதாரமும் இல்லை.

வர்மம் உண்டாகும் காரணங்கள்

உயரமான இடத்திலிருந்து கீழே விழுவதால் அல்லது உயரத்திலுள்ள பொருள் தன் மேல் விழுவதால், எறியப்பட்ட பொருள் உடலில் உள்ள வர்ம இடங்களைத் தாக்குவதால் (இது ஆயுதங்களையும் குறிக்கும் இயற்கையாக முறிந்து விழும் மரம் - பாறை - சுவர்கள் போன்றவற்றைக் குறிக்கும்).

நடக்கும் போது கால் இடறி விழுவதால் அல்லது வேகமாக ஓடும் போது அல்லது உடற்பயிற்சி செய்யும் போது இசகு பிசகாக தாக்கப்படுவதால், வர்ம இடங்களின் மேல் தாக்குதல் ஏற்பட்டால், உடனே ஆள் நினைவிழந்து விழுந்து விடுவான்.வர்மம் உடலில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட வர்ம இடங்களில் எந்த இடம் தாக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்து. அத் தாக்குதலில் அங்கு ஏற்பட்ட முடிச்சை இளகச் செய்து தக்க மருந்து கொடுத்துக் காப்பாற்றாவிட்டால் அவன் இறந்து போய்விடுவான். அதனால் வர்மக் கலையின் மருத்துவப் பயன் மிகமிக முக்கியமானது அதிகமானதும் கூட.



Scanned with CamScanner

நிபந்தனைகள்:

ஒருவனுக்கு வர்மக்கலை கற்றுக் கொடுப்பதற்கு முன் அவனைப் பனிரெண்டு வருடம் தன்னிடம் சீடனாக வைத்திருந்து அவனுடைய நடவடிக்கைகள் எல்லாவற்றையும் நன்கு பரிசீலனை செய்து அவன் மறந்தும் பிறன் கேடு சூடிற்க என்ற குறள் நெறிக்கேற்ப நடந்து கொள்வான் என்று நன்கு உறுதி செய்து கொண்ட பிறகே அவனுக்கு வர்மக்கலையைப் போதிக்க வேண்டும் என்று சித்தர்கள் கூறியுள்ளனர். தாங்கள் கண்டுணர்ந்த அரிய கலை தவறாகப் பயன்பட்டு விடக்கூடாது என்ற சீரிய நோக்கத்தாலேயே சித்தர்கள் கடுமையான நிபந்தனைகளை விதித்தனர்.

*A. Arumugam*
*II B.Sc Physics*

**நைட்ரஸ் ஆக்ஸைடு ($N_2O$)**

மனிதனின் அனுமதியின்றி சிரிப்பை தூண்டும்

நைட்ரஜன் ஆக்ஸைடு என்பது 2 நைட்ரஜன் அணுக்களும், 1 ஆக்சிஜன் அணுவும் அடங்கியது($N_2O$). பசுமை இல்லா வாயுக்களில் பிரதானமான இது நிறமற்ற, தீப்பிடிக்காத, நறுமணமும் இன்சுவையும் உள்ள வாயுவாகும். அதன் வலியகற்றும் மயக்க மருந்துத் தன்மை காரணமாக பல் மருத்துவத்திலும், சில அறுவை சிகிச்சைகளிலும் பயன்படுத்தப்படுகிறது. Inhalation sedation, Laughing gas, Relative analgesia எனப் பல பெயர்கள் உண்டு.

இதை சுவாசித்த 20 விநாடிகளில் மூளையின் ரிசப்டார்களை அடைந்து கிச்சு கிச்சு மூட்டுவதால் சிரிப்பு ஏற்படுகிறது. பிற அனஸ்தீசியா மருந்துகளைப் போல மூளை, இதயம், சிறுநீரகம் போன்ற உறுப்புகளை இது பாதிப்பதில்லை என்பது இதன் ப்ளஸ்பாயிண்ட். விலங்குகளுக்கும் இது பொருந்தும்.

**B. Sudha**
*II B.Sc Maths*



## வலை அலை



1. www. lytro. com

ஒரு புதிய கேமரா, பெயர் லைட்ரோ (Lytro) இந்த சாதனத்தைப் பயன்படுத்தி நாம் புகைப்படம் எடுத்துக் கொண்டே செல்லலாம். எடுக்க வேண்டிய காட்சிகளை பல கோணங்களில் பார்த்து விட்டு. சரியான வெளிச்சம் இருக்கிறதா என்பதை எல்லாம் பார்த்து விட்டு எடுக்க வேண்டியதில்லை. படம் எடுக்கப்பட்ட பின்னர். அவற்றை ஃபோகஸ் செய்வதில் இருந்து, வெளிச்ச அமைப்பை கொண்டு வருவது வரை கணினியில் செய்து கொள்ள முடியும். இதன் பயன்பாட்டை அறிய உதவும் வலைதளம் www. lytro. com

***S. Maharaja***
***II B.Sc. Computer science***

2. www. quib.by

தொழில்நுட்பம் வேகமாக வளர்ந்து வரும் இந்த நாட்களில் பலருக்கும் இருக்கும் ஒரே பிரச்சனை, எப்படி இவை எல்லாவற்றையும் தெரிந்து கொள்வது? அதுவும் குறிப்பாக இளம் குழந்தைகள் இருக்கும் பெற்றோருக்கு அவர்களுக்கு எதைப் பற்றி, எப்படிச் சொல்வது என்பதில் இருந்து அவர்கள் தொழில் நுட்ப வளர்ச்சிகளைப் பயன்படுத்தும் போது எது நல்லது/ கெட்டது என்பதைப் புரிந்து வழி நடத்தும் அளவுக்குத் தகவல்களைத் தெரிந்து கொள்ள நேரம் கிடைப்பது இல்லை. இதற்கு நல்ல தீர்வு ஒன்றைக் கொடுக்கிறது ஒரு வலைதளம்.

www. quib.by என்ற இந்தத் தளத்தில் உங்கள் மனதில் இருக்கும் கேள்விகளுக்குப் பதில் ஏற்கனவே இருக்கலாம். இல்லையெனில் கேள்வியை எழுதுங்கள். அந்தத் துறையில் திறம்பட்ட ஒருவரிடம் இருந்து தெளிவான பதிலைப் பெற்றுக் கொள்ளலாம்.

***P. Gomathi***
*II B.Sc., Computer Science*

## அறிவோம் அறிவியலார்
## டாக்டர். எம். விஸ்வேஸ்வரய்யா



Bharat Rathna
Sir MOKSHAGUNDAM VISVESVARAYA
1860-1962

பிறப்பு : மைசூர் அருகில் சிக்கவால்புரி என்னும் இடத்தில் 15.9.1861 ல் பிறந்தார்.

பெற்றோர் : தந்தை சீனிவாச சாஸ்திரி, பரம ஏழை.

படிப்பு : பெங்களூர் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து அறிவியல் பட்டம் பெற்றார். பூனாவில் ஒரு அறிவியல் கல்லூரியை ஆங்கிலேயர் நடத்தி வந்தனர். அங்கே படித்து பொறியியல் கல்வியில் கல்லூரியிலேயே முதல் மதிப்பெண் பெற்றார்.

பணி : பொதுப்பணித்துறையின் இணைப் பணியாளர் பதவிக்குத் தனது 23 -வது வயதில் மும்பையில் பணியில் அமர்த்தப்பட்டார்.

சிறப்பு : 1.எத்தகைய எண்ணத்திற்கும் உடனடியாக வடிவம் கொடுத்து அதைக் கட்டமாகக் கொண்டு வந்து நிறத்துவதில் அவர் திறமையுள்ளவராக இருந்தார்.

2. காண்டேஷ் மாகாணத்தில் உள்ள துலியா காட்டாற்று நீரைக் கொண்டு காண்டேஷ் மாகாணம் (3 மாவட்டங்கள்) முழுவதும் குடிநீர் பஞ்சத்தைத் தீர்த்தார் விஸ்வேஸ்வரய்யா.

3. இவரைப் 'பொறியர்ளர்களின் பொறியாளர்' என்றும் 'இந்திய நீர்மின் திட்டங்களின் தந்தை' என்றும் அழைத்தனர்.

4. காண்டேஷ் , பூனா, பெங்களூர், மைசூர், பரோடா என்று 42 நகரங்களில் இன்றும் குடிநீர்ப் பஞ்சம் கிடையாது. அதற்கு காரணம் ஒரே ஒரு மனிதர். அவர் தான் விஸ்வேஸ்வரய்யா.

5. சிந்து நதியிலிருந்து நீரை அருகிலுள்ள, ஒரு மலையிலிருந்த பெரிய குளத்துக்குக் கொண்டு சென்று அங்கிருந்து குழாய்கள் மூலம் அப்பகுதியின் குடிநீர்ப் பஞ்சத்தைத் தீர்த்து வைத்தவரும் இவரே.

6. இவரால் நிறுவப்பட்ட, கிருஷ்ணராஜசாகர் அணை இந்தியாவின் முதல் அணை மட்டுமல்ல முதல் நீர் மின் நிலையமும் கூட பல ஊர்களுக்கு இன்றும் ஒளியைத் தருகிறது.

இறப்பு : 1962- ம் ஆண்டு விஸ்வேஸ்வரய்யா காலமானார். அவரது பிறந்த நாளை பொறியாளர் தினமாக நம் நாடு அனுசரித்து வருகிறது.

S.Sindhu & M. Muruga Devi
II B.Sc (Computer Science)



### எரிந்த தாளில் எழுத்துக்கள் தெரிவது ஏன்?

காகிதங்கள் எரிந்த பின்னாலும், அதிலுள்ள எழுத்துக்கள் தெரிவதை நீங்கள் கவனித்து இருப்பீர்கள். அது ஏனென்று தெரியுமா?

காகிதம், தாவர செல்லுலோஸ் என்னும் கனிமப் பொருளால் ஆனது. இது எரியக்கூடியது. அச்சு மையிலும் கரிமப் பொருட்களும், வண்ணம் தரும் நிறமிகளும் இருக்கும். இரும்பு சல்பேட் போன்ற சில இரசாயண பொருட்களும் மையில் காணப்படும்.

காகிதம் எரியும் போது, கரிமப்பொருட்களும் நிறமியும் எரிந்து போகும். ஆனால் இரும்பு சல்பேட் மட்டும் எரியாமல் இருக்கும் இதுவே எழுத்து இருந்த இடத்தில் இருந்து எழுத்துக்களை அடையாளம் காட்டுகிறது.

*P. Santhi*
*I B.Sc Chemistry*

### புனைபெயர் பெற்ற இடங்கள்

1. முத்துக்களின் தீவு என்றழைக்கப்படும் நாடு - பஹ்ரைன்
2. வெள்ளை யானை பூமி என்றழைக்கப்படும் நாடு - தாய்லாந்து
3. உலகத்தின் கூரை என்றழைக்கப்படுவது - பாமீர்
4. பீகாரின் துயரம் என்றழைக்கப்படும் நதி - கோசி நதி
5. வங்காளத்தின் துயரம் என்றழைக்கப்படுவது - தாமோதர் ஆறு
6. சீனாவின் துயரம் என்றழைக்கப்படுவது - ஹுவாங்கோ ஆறு
7. இந்தியாவின் நறுமணத் தோட்டம் என்றழைக்கப்படுவது - கேரளா
8. இந்தியாவின் பூந்தோட்டம் என்றழைக்கப்படுவது - பெங்களூர்
9. கனவு கோபுர முனைகளின் நகரம் என்றழைக்கப்படுவது - ஆக்ஸ்போர்டு, இங்கிலாந்து
10. ரோஸ் பிங்க் நகரம் என்றழைக்கப்படுவது - ஜெய்ப்பூர்

***M. Shanmuga vadivoo***
*II B.Sc Zoology*

## Why do onions make you cry?

Unless you've avoided cooking you've Probably cut up an onion and experienced the burning and tearing you get from the vapours. When you cut an onion, you break cells, releasing their contents amino acid sulfoxides from sulfuric acids, Enzymes that were kept seperate now are free to mix with the sulfuric acids to produce propanethiol S-oxide, a volatile sulfur compound that wats upward toward your eyes. This gas reacts with the water in your tears to form sulfuric acid. The sulfuric acid burns, stimulating your eyes to release more tears to wash the irritant away.

Cooking the onion inactivates the enzyme, so while the smell of cooking onions may be strong, it doesn't burn your eyes. Aside from wearing safety googles or running a fan, you can keep from crying by refrigerating your onion before cutting it or by cutting the onion under water.

*S. Thillai*
*II B.Sc Chemistry*

## What is a Hurricane?

A hurricane is a huge storm!. It can be up to 965km across and has strong winds spiralling inward and upward at speed of 75 to 200mph. Each hurricane usually lasts for over a week, moving 16-32 kilometers per hour over the open ocean. Hurricanes gather heat and energy through contact with warm Ocean waters. Evaporation from the seawater increases their power. Hurricanes rotate in a counter - clockwise direction around an eye in the northern hemisphere and clockwise direction in the southern hemisphere. It has only light winds and fair weather. When they come into land, the heavy rain, strong winds and large waves can damage buildings, trees and cars.

*R. Valliammal*
*II M.Sc Mathematics*



## Diamond

A diamond is a transparent gem made of Carbon. One of the earth's most common elements. The formation of diamonds began very early in the earth's history. When the condensation of solid matter into a sphere caused the centre of the planet subjected to incredible extremes of temperatures and pressure.

The atomic structure of a diamond gives it the property of being the hardest substance known to man, natural or synthetic.

Types of Diamonds:-

Pink diamonds
White diamonds
Champange diamond
Pink Champange diamond
Yellow diamond
Blue diamond
Green diamond



*S. Pon Raman*
*S. Murugan*
III. B.Sc Chemistry

## மிகச் சிறிய தீயணைக்கும் வண்டி

இங்கிலாந்தின்லிங்கன்ஷயர் என்னும் பகுதியைச் சேர்ந்த ஜான் வோர்டு என்ற முதியவர் உலகிலேயே மிகச் சிறிய தீயணைப்பு வண்டியை உருவாக்கி இருக்கிறார்.

மூன்றே சக்கரங்கள் கொண்ட அதில் தீயணைப்பு வண்டிக்கு உரிய அனைத்து சாதனங்களும் இடம்பெற்றுள்ளன. 50 லிட்டர் கொள்ளவு கொண்ட 6 தண்ணீர் தொட்டிகள் , மீட்க உதவும் ஏணி ஆகியவை எல்லாம் உள்ளன. பொத்தானை அழுத்தினால் போதும் அவையெல்லாம் இயங்கும் மூன்று தீயணைப்பு வீரர்களும் இந்த வாகனத்தில் பயணம் செய்யலாம். சிறிய தீ விபத்துகளைத் தடுக்க தனது தீயணைப்பு வண்டி பயன்படும் என்று ஜான் வோர்டு கூறுகிறார்.

*A. Muthumari*
*III B.Sc. Maths*



Scanned with CamScanner

## முக்கிய கனிம வளங்கள் கிடைக்கும் மாநிலங்கள்

| கனிமம் | மாநிலங்கள் |
|---|---|
| நிலக்கரி | மத்திய பிரதேசம், பீகார், மேற்கு வங்காளம் |
| ஆண்டிமணி | பஞ்சாப், கர்நாடகா, இராஜஸ்தான், பீகார் |
| பாக்சைட் | பீகார், மத்திய பிரதேசம், குஜராத், கர்நாடகா |
| தாமிரம் | இராஜஸ்தான், பீகார் |
| குரோமைட் | ஒரிஸா, மகாராஷ்டிரா, பீகார் |
| வைரம் | மத்திய பிரதேஷ் |
| தங்கம் | கர்நாடகா, ஆந்திர பிரதேஷ், ஒரிசா |
| ஜிப்சம் | இராஜஸ்தான், ஆந்திர பிரதேஷ், குஜராத் |
| இரும்பு | மத்திய பிரதேஷ், ஒரிசா, பீகார், கர்நாடகா, கோவா |
| ஈயம் | இராஜஸ்தான், ஆந்திர பிரதேஷ் |
| சுண்ணாம்புக்கல் | மத்திய பிரதேஷ், தமிழ்நாடு |
| மாங்கனீஸ் | மத்திய பிரதேஷ், மகாராஷ்டிரா, ஒரிஸா, ஆந்திர பிரதேஷ் |
| சலவைக்கல் | இராஜஸ்தான் |
| மைக்கா | பீகார், இராஜஸ்தான், ஆந்திரா |
| நிக்கல் | ஒரிஸா |
| பெட்ரோல் | மகாராஷ்டிரா,குஜராத், அஸ்ஸாம், ஆந்திரா |
| வெள்ளி | கர்நாடகா, பீகார், தமிழ்நாடு, இராஜஸ்தான் |
| கந்தகம் | தமிழ்நாடு |
| தகரம் | பீகார் |
| தோரியம் | கேரளா, தமிழ்நாடு, ஆந்திரா |
| யுரேனியம் | கேரளா, பீகார், இராஜஸ்தான் |
| ஜிங்க் (துத்தநாகம்) | இராஜஸ்தான் |
| ஆஸ்பெஸ்டாஸ் | ஆந்திர பிரதேஷ், பீகார் |

*S. Saraswathi*
*II B.Sc Chemistry*
*GMuthulakshmi*
*K. Mareswari @ Barani*
*P. Muthu lakshmi*
*III B.Sc Chemistry*



### ஃபினாலிக் சேர்மம்

காய்கறி மற்றும் பழங்களில் உள்ள வாசனை, நிறம், மற்றும் சுவை ஆகியவற்றின் காரணம் அவற்றில் ஃபினாலிக் சேர்மங்கள் இருப்பதே ஆகும். பினாலிக் சேர்மங்கள் இதய மற்றும் புற்று நோயைத் தடுக்கும் தன்மை கொண்டது.

காய்கறி அல்லது பழங்களை வெட்டி சிறிது நேரம் காற்றில் வைக்கும் போது பழுப்பு நிறமாக மாறுகிறது ஏன் என்று தெரியுமா?

காய் மற்றும் பழங்களில் உள்ள ஃபினாலிக் சேர்மம் என்ற வேதிப்பொருள் காற்றில் உள்ள ஆக்ஸிஜனுடன் வினைபுரிந்து மெலானின் என்ற பழுப்பு நிற பொருளாக மாறுகிறது.

உலகிலேயே மிக வலிமை மிக்க அமிலம் -

ஃபுளுரோ சல்பூரிக் அமிலம் ($HFSO_3$)

*V. Nageshwari*
*II B,Sc. Chemistry*

### மின்னணுக் கிராமம்

புவி மின்னணுக் கிராமம் என்ற சொல் ஓர் எல்லையற்ற கிராமத்தைக் குறிக்கிறது. புவி கிராமம் என்ற சொல்லை முதன் முதலில் பயன்படுத்தியவர் மார்ஸல் மாக்லூகான். இது உலகின் பல்வேறு நாடுகளில் உள்ள மக்களை ஒன்றிணைத்து உலக நிகழ்ச்சிகளை அறிய வழிவகுக்கிறது.

பெங்களூரு - மைசூர் நெடுஞ்சாலையில் பெங்களூரிலிருந்து 12 கி.மீ தூரத்தில் புவிக்கிராமம் அமைக்கப்பட்டுள்ளது. 110 ஏக்கர் பரப்பளவில் பசுமையான புல் வெளிகளும், தென்னை மரங்களும், இடையில் கட்டடங்களும், நிறைந்த மாசு இல்லாத சூழ்நிலையில் அமைந்துள்ளது. இந்தத் தொழில் நுட்ப வளாகம் மிகச் சிறந்த இந்தியா மற்றும் அகில உலகக் கட்டட வல்லுநர்களால் வடிவமைக்கப்பட்டதாகும். இவ்வளாகம் மக்கள் குடியமர்வதற்கு ஏற்ற அனைத்து வசதிகளையும் கொண்டுள்ளது.இப்புவி கிராமத்தை அடைய பெங்களூரிலிருந்து ஏறக்குறைய 20 நிமிடத் தூரப் பயணம் ஆகிறது.

*S. Meena*
*I B,Sc. Chemistry*

## ஒன்பது வகை அறிவாற்றல்

ஹாவர்டு கார்னர் எனும் உளவியல் விஞ்ஞானி ஒன்பது வகை அறிவாற்றலை விளக்குகிறார். ஒரு மனிதனுக்கு அதில் ஏதாவது ஒன்றோ, பலவோ கண்டிப்பாக இருக்குமாம்.

1. இயற்கையின் நுனுக்கங்களைக் புரிந்து கொள்ளும் அறிவாற்றல்
   - Naturalistic Intelligence
2. இசை அறிவாற்றல்
   - Musical Intelligence
3. கணக்கிடும் அறிவாற்றல்
   -Mathematical & Logical Intelligence
4. தத்துவத் தேடல் கொண்ட அறிவாற்றல்
   - Existential Intelligence
5. பிறரிடம் முழுப்புரிதலுடன் இருக்கும் ஆற்றல்
   - Interpersonal Intelligence
6. நடன உடலசைவு குறித்த அறிவாற்றல்
   - Body Kinesthetic Intelligence
7. மொழி அறிவாற்றல்
   - Liguistic Intelligence
8. உளவியல் அறிவாற்றல்
   - Interpersonal Intelligence
9. முப்பரிமாணத்தில் சிந்திக்கும் அறிவாற்றல்
   - Spatial Intelligence

*R.Sri Raman,*
*II B,Sc. Computerscience*



## பெட்ரோல்

புவியில் சில பகுதிகளில் நிலத்தடியில் இயற்கையாகக் காணப்படும் ஒரு வகை எண்ணெய். இது நீர்ம நிலையில் உள்ள பல ஹைட்ரோகார்பன்களின் (Hydro Carbon) கலவை ஆகும். இவற்றின் பெரும்பாலானவை அல்க்கேன்கள் (Alkane) ஆகும். இவற்றின் நீளம் $C_5H_{12}$ - ல் இருந்து $C_{18}H_{38}$வரை பொதுவாகக் காணப்படுகிறது.

இயற்கையாக கிடைக்கும் பாறை எண்ணெய்யில் உலோகமற்ற தனிமங்களான கந்தகம்(Sulphur) ஆக்சிஜன்(Oxygen), நைட்ரஜன் (Nitrogen) போன்றவையும் காணப்படலாம்.

### உருவாகும் முறை

இதனை பாறை எண்ணெய் (Rock oil) அல்லது கச்சா எண்ணெய் (Crude oil) என்றும் கூறலாம். கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த கடல் வாழ் உயிர்கள் மடிந்து போன பின் கடல் அடியில் மண்ணுள் புதையுண்டு அங்கு ஏற்பட்ட அழுத்தத்திலும் (Pressure), வெப்பத்திலும் (Heat) அழுகி பாக்டீரியாக்களாய் சில மாற்றங்கள் அடைந்து சுற்றி இருந்த மண்ணோடும் உப்புகளோடும் சில வேதிவினைகளின் பாற்பட்டு இப்படி கச்சா எண்ணெய்யாகவும் (Crude oil) நிலத்தடி வளிமமாகவும் மாறுகின்றன. பிறகு உயர் அழுத்தங்களால் புவியின் பாறை வெடிப்புகளுக்குள் சென்று எண்ணெய் வளங்களாக மாறுகின்றன. இதனாலேயே பல எண்ணெய் கிணறுகள் கடலின் மீது அமைந்திருக்கின்றன.

*V. Selvakumar*
*K. Ulaganathan*
*III B,Sc. Chemistry*

## நம்பிக்கை விதை

அவள் பிறந்த போது, குறைபிரசவத்தால் 11/2 கிலோ மட்டுமே இருந்தாள் . வளர்ந்த போது போலியோ நோயினால் இடது கால் செயல் இழந்து விட்டது. படிக்கும் போது, நீ என்னவாக விரும்புகிறாய் என்ற கேள்விக்கு விளையாட்டு வீராங்கனை என்று பளிச்சென்று பதில் கூறினாள். அனைவரும் வெடுக்கென சிரித்தனர்.

கடினமாய் முயற்சி செய்தாள். மருத்துவர் ஆலோசனை படி நடந்தாள். 12 வயதில் உலகத்தின் உதவியினால் நடப்பதை விட்டு, தானாக நடக்க பலன் பெற்றாள். பயிற்சியும், தளராத முயற்சியும் நம்பிக்கையை வளர்த்துக் கொண்டிருந்தது.

1956 - ம் ஆண்டு ஒலிம்பிக் பந்தயத்தில் கலந்து கொண்டு வெண்கலம் வென்றாள்.1960 - ஒலிம்பிக்கில் 100, 200, 400 மீட்டர் என மூன்று ஓட்டப்பந்தயங்களிலும் தங்கப் பதக்கம் வென்றாள். நிற்கவே தடுமாறிய அவள் உலகின் வேகமான வீராங்கனை என்று வரலாற்றில் தனது முத்திரையைப் பதித்தாள். அந்தப் பெண் அமெரிக்காவின் டென்னசி என்னும் இடத்தில் பிறந்த வில்மா ருடால்ப் ஆவார்.

ஏளனங்களை எதிர் கொள் .....
தோல்விகளை சகித்துக் கொள் .....
நம்பிக்கையை தளர விடாதே....
முயற்சியை விட்டு விடாதே....
உன்னால் முடியும் மறந்து விடாதே....

*S. Jeyalakshmi*
*I B.Sc. Chemistry*



## Do you know these uses?

1. Use - It saved a lion from a trap
2. Use - a Dwelling place
3. Use - Decline
4. Use - Call names, rail at
5. Use - To blame
6. Use - To tickle the fancy
7. Use - To awaken
8. Use - Husband or wife
9. Use - Read
10. Use - Throw into disorder
11. Use - To hesitate
12. Use - Wide acclamation

Answer

| | | | |
|---|---|---|---|
| 1. Mouse | 2.House | 3. Refuse | 4. Abuse |
| 5. Accuse | 6. Amuse | 7. Arouse | 8.Spouse |
| 9. Peruse | 10. Confuse | 11. Pause | 12. Applause |

***S. Narasimma prasad.***
*II M.Sc Maths*

## யார் ? ...... என்ன?

1. உமி போல் பூப்பூக்கும் சிமிழ் போல் காய் காய்க்கும் – அது என்ன?
   – நெல்லிக்காய்
2. உப்பினை உண்டவன் உறங்காமல் அலைகிறான் – அவன் யார்?
   – கடல்
3. உச்சியில் பச்சை தோகை, உள்ளங்காலில் உரோமம் – அது என்ன?
   – கரும்பு
4. இரவும் பகலும் ஓய்வு இல்லை, உறங்கினால் எழுப்ப ஆள் இல்லை – அது யார்?
   – இதயம்
5. உலகமெல்லாம் அலைவான் அவனை ஒருத்தரும் கண்டதில்லை – அவன் யார்?
   – காற்று
6. உயிர் இல்லாத நீதிபதி ஒழுங்காக நியாயம் சொல்கிறார் – அவர் யார்?
   – தராசு
7. உச்சியிலே கிரீடம், உடம்பெல்லாம் கண் – அது என்ன?
   – அன்னாசிபழம்
8. உருவத்தில் சிறியவன் படபடவென பொறிவான்.– அவன் யார்?
   – கடுகு

## கனவு

கனவு காணுங்கள்!
கனவு காணுங்கள்!
கனவுகளை எண்ணங்களாக மாற்றுங்கள்
எண்ணங்களுக்கு செயல் வடிவம்
என்ற முடிவைத் தாருங்கள்

*K. Thilagavathy*
*II B.Sc Zoology*



## தோழி விழித்திடு

சோம்பேறியாய் காலம் கழித்தது போதும்
விழித்திடு தோழி ! விழித்திடு !
அதிகாலை சேவல் எழுப்ப
சுறு சுறுப்பாய் ஆரம்பமானது
அன்றைய வாழ்க்கை ......
நினைத்த நேரத்தில் அலாரம்
அடித்து சோம்பேறியாய் ஆரம்பிக்கின்றது
இன்றைய நவீன வாழ்க்கை .....
வெயிலில் ஏர் உழுது விவசாயம்
செய்தவன் 100 ஆண்டுகள்
சுறு சுறுப்போடுவாழ்கிறான் ......
AC- ல் இருந்து கணிணியில்
வேலை செய்கின்றவர்கள் எல்லாம்
60 – ஆண்டுகள் தாண்ட முடியவில்லை
அன்றைய பெண்கள் வீடுகளில்
சமைப்பது முதல் துவைப்பது வரை
அவர்களே செய்தனர் உடல்
ஆரோக்கியத்துடன் நலமுடன் வாழ்ந்தனர் .....
இன்றைய நிலைமை அனைத்திலும்
எந்திரத்தின் உதவியை நாடுகின்றனர்
சோம்பேறியாய் மாறுகின்றனர்.....
அன்று வீட்டில் செய்த வேலைகளை
இன்று பெண்கள் பணம் செலவித்து
உடற்பயிற்சி கூடங்களில் செய்கின்றனர்
மொத்தத்தில் எந்திரம் மற்றும் எந்திரவாழ்க்கை
உன்னை சோம்பேறியாக மாற்றிவிட்டது
போதும் சோம்பேறியாக இருந்தது
விழித்திடு தோழி !
விழித்திடு !
சுறு சுறுப்பாக மாறிடு !

*S. Ponnammal*
*II B.Sc C.S.*

## சுதந்திரம்

வானத்தைப் போல மிக நீண்டது
என் பாரத தேசத்தின் சுதந்திர போர்
அடிமையப் பட்டுக் கிடந்த தேசத்தின்
விடுதலைக்கு வித்திட்டவர்கள்
விடுதலை என்ற வீர விதையை
விதைத்தவர்கள் எத்தனையோ
ஆயிரம் பேர்! தேச விடுதலை
தனி மனிதனுக்கோ ! எந்த
தனி இயக்கத்துக்கோ !
சொந்தமானதல்ல.
வானத்தில் எண்ணமுடியாத நட்சத்திரத்தைப்
போல ! என் இந்திய நாட்டின்
தேச விடுதலைக்காக பாடுபட்ட
எத்தனையோ தியாக உள்ளங்கள்
வரலாற்றில் இடம் பெறாமல் மறைந்து
போனதும் உண்டு
மகாத்மா காந்தி இந்திய சதந்திரப்
போரில் பங்குபெறும் முன்னரே !
பாரத தேவியின் கைவிலங்குகளை
உடைத்தெறிய வீர சிங்கங்கள்
தன்னுயிரை அர்ப்பணித்ததும் உண்மை
அந்த ஆயிரம்! ஆயிரம்! தியாகிகள்
தியாகம் தான் பாரதத்தின்
சுதந்திரம்!



வந்தே மாதரம் என்னும் மந்திர வார்த்தை
தேச விடுதலையின் போது
ஆன்ம கீதமாக இருந்தது
தியாகிகளுக்கு
அடுப்படியில் அடிமைப்பட்டு
கிடந்த பெண்மை என்னும்
பூவை பாரத நாட்டின்
புதுமைப் பெண்களாக
மாற்றிய சுதந்திரத்திற்கு
நான் தலைவணங்குகிறேன்
வாழ்க்கையை நீ
எதிர் கொள்ளும் போது
தோல்விகள் உன்னை
காயப்படுத்தும் தோல்விகள் என்று
துவண்டு விடாதே!
அது உன் வெற்றியின்
ஆரம்பம் என்று நினைத்துக்கொள்
தோல்விகள் என்று துவண்டிருந்தால்
நாட்டிற்கு சுதந்திரம்
கிடைத்திருக்குமா.
மனிதனே!
தோல்விகள் வந்தால் தொட்டு
வணங்குங்கள் அது
வெற்றியை விட சிறந்தது.

*M. Ramya*
*II. B.Sc Physics*



மகிழ்ச்சியே அன்றி
துன்பம் அறியாத
தரையின் சொர்க்கம்

திறமைகளின் பிறப்பிடம்
ரம்மியமான சூழலில்
வியப்பூட்டும் இயற்கையுடன்
இயந்திர அறிவையும் கற்பித்து
கணிதம் மற்றும் அறிவியலின்

தாயகமாக விளங்கி
யுகங்கள் வியக்கும்
மா மனிதர்களை உருவாக்கி
தனக்கு நிகரில்லா பெருமையுடனும்
வரையறையற்ற அறிவியலில்
ஆர்வத்தை தூண்டியும்

இவற்றோடு நில்லாமல்
பெருந்தன்மையும் - நீதிக்குத்
துணையாக நிற்கும் தைரியத்தையும்

கணினி, கலை என
பல்வேறு திறமைகளையும்
பாலூட்டி வளர்க்கும்
அரிய இடம்

எங்கள் கல்லூரி

கி.சோமசுந்தரி
I B.Sc Maths



# எய்ட்ஸ் நோயை கட்டுப்படுத்தும் சோயா பீன்ஸ்



சோயா பீன்ஸ் எய்ட்ஸ் நோயை குணப்படுத்தும் தன்மை கொண்டது என ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

உயிர் கொல்லியான எய்ட்ஸ் நோயை கட்டுப்படுத்த மருந்துகள் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் அமெரிக்காவில் உள்ள ஜார்ஜ் மேசன் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் ஆராய்ச்சி முடிவில், சோயா பீன்ஸ் எய்ட்ஸ் நோயை கட்டுபடுத்தும் தன்மை உடையது என தெரியவந்துள்ளது. அதாவது, சோயா பீன்சில் எய்ட்ஸ் நோயை உண்டாக்கும் எச்.ஐ.வி. கிருமிகளை தடுக்கும் ஜெனிஸ்டின் என்ற மூலப்பொருள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த ஜெனிஸ்டின் செல்களில் ஊடுருவி எச்.ஐ.வி. கிருமிகள் பரவாமல் தடுக்கும் சக்தி படைத்தது. எனவே எய்ட்ஸ் நோயை சோயா பீன்ஸ் கட்டுபடுத்தும் என விஞ்ஞானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

*M. Madasamy &*
*M. Siva Perumal*
*II. B.Sc Zoology*

# The Majic of Numbers

| | | |
|---|---|---|
| (6 x 6) + 6 | = | 42 |
| (66 x 6) + 6 | = | 402 |
| (666 x 6) + 6 | = | 4002 |
| (6666 x 6) + 6 | = | 40002 |

| | | |
|---|---|---|
| $9^2 - 2^2$ = | = | 77 |
| $59^2 - 52^2$ | = | 777 |
| $559^2 - 55^2$ | = | 7777 |
| $5559^2 - 555^2$ | = | 77777 |

| | | |
|---|---|---|
| $13^2+15^2+98^2$ | = | $31^2+54^2+89^2$ |
| $15^2+43^2+98^2$ | = | $51^2+34^2+89^2$ |
| $15^2+48^2+93^2$ | = | $51^2+84^2+39^2$ |
| $18^2+43^2+95^2$ | = | $81^2+34^2+59^2$ |
| $18^2+45^2+93^2$ | = | $81^2+54^2+39^2$ |

$65^2 - 56^2 = 33^2$

$6565^2 - 5656^2 = 3333^2$

$656565^2 - 565656^2 = 333333^2$

$65656565^2 - 56565656^2 = 33333333^2$

**K. Suja**
*II M.Sc. Maths*



# Majic Number 1089

*Take any three digit number (first digit > last digit)*

| | | | |
|---|---|---|---|
| 725 Reverse it. | | 527 | |
| 725 - 527 | = | 198 | reverse it 891 |
| 198 + 891 | = | 1089 | |

Another example
524 (-)
425
——
099
990
——
1089

**P.Ponmari**
*II B.Sc. C.S.*

## Do you Know?

***Chemicals present in Tea -***
Anti oxidants, Caffeine, Tannin, Fluoride and Flavanoids.

***Chemicals present in nailpolish -***
Powedered glass, Red Phosphorous

***Chemicals present in Cigarrette -***
Benzene, Nicotine, Formaldehyde, Ammonia, Acetone, carbonmonoxide, Tar, Arsenia, hydrogen


***G Muthuparthiban***
***R. Krishnanathan***
*II B.Sc. Chemistry*



Scanned with CamScanner

## கனினி

தரையில் எழுதிய என்னை
திரையில் எழுத வைத்தாய்
என் மனதில் பதியாததை
உன் நினைவில் பதித்து கொண்டாய்
உன் உடலின் கணையத்தை பார்த்தில்லை
இணையத்தில் உலகத்தையே பார்த்தேன்
மடல் எழுதிய காலம்போய்
மெயில் அனுப்பும் காலம் வந்தது
ஹான்ட் புக் எழுதிய காலம் போய்
பேஸ்புக்கில் எழுத வைத்தாய்
போகோ பார்த்த என்னை
யாசவ பார்க்க வைத்தாய்
சைக்கிள் ட்யூப்பில் காத்து
யூ ட்யூப்பில் நீ வற்றாத ஊற்று
சாகா வரம் பெற்ற சாணக்கியனே
கேட்டதை கொடுக்கும் அக்ஷய பாத்திரமே
கடல் போல் கொட்டிகிடக்கும் குவியலை கொடுக்கும் ஆசானே
கற்றது கையளவு கல்லாதது கனினியளவு!
மருத்துவ படைப்பாளியே
விண்வெளி ஆராய்ச்சியாளனே
தொழில் நுட்ப வல்லுனரே
சாதிக்க துடிக்கும் இளைஞனேவா!
கற்காலம் இரும்புகாலம் செம்புகாலம்
அல்ல இக்காலம் உலகத்தையே புரட்டிபோடும் கனினிகாலம்!



**V. Yeganthalingam**
*II B.Sc.Computerscience*



## விடியல் உன் கையில்



*இரவின் மடியில் சாய்ந்து கொண்டு*
*விடியலுக்காக காத்திருப்பதை விட*
*இரவின் கைபிடித்து நடைபயணம் செய்துபார் !*
*விடியல் உனக்காக வரவேற்பு கம்பளம் விரித்து காத்திருக்கும்*

*உழைப்பென்னும் உளி கொண்டு*
*செதுக்கிப்பார் -உன் மனதை*
*உயிருள்ள சிற்பமாய் காட்சியளிப்பாள்*
*உன் வெற்றி தேவதை !*

*வாய்ப்புகள் வாயிற்கதவை தட்டும் என*
*காலச்சக்கரத்தை வேடிக்கை பார்ப்பதை விட*
*காலச்சக்கரத்துடன் நீயும் சுழன்று பார்*
*வாய்ப்புகள் உன் வாசலில் வரிசையில்*
*நிற்க வாய்ப்பு கேட்கும் !!*

*கற்கள் கால்களை பதம் பார்த்தாலும்*
*நதிகள் தன் ஓட்டத்தை நிறுத்துவதில்லை*
*கடலில் கலக்கும் வரை*
*இளைஞனே*
*நீயும் கடிவாளம் கட்டிய குதிரையாய்*
*ஓடிப்பார்*
*உன் இலட்சிய பாதையில்*
*உன் இலக்கு உன் கையில் ஜொலிக்கும்*
*நிலக்கரி பிறந்த வைரமாய் !!!.....*

**S. Sriramakrishnan**
*II B.Sc. Computerscience*

## முழுநிலா இல்லாத மாதம்



முப்பது நாட்களுக்கு ஒருமுறை முழுநிலவு நாளான பௌர்ணமி வருகிறது என்பது நாம் அறிந்த ஒன்றே ! ஒரு பௌர்ணமிக்கும். அடுத்த பௌர்ணமிக்கும் இடைப்பட்ட காலம் 29 நாட்கள், 12 மணி, 44 நிமிடங்கள். அப்படியெனில் ஒரு மாதத்தில் பௌர்ணமியே வராமல் போக சாத்தியக்கூறுகள் உண்டா ? என்று வியந்தால் உண்டு என்பதே பதிலாக கிடைக்கும். அது எவ்வாறு என்பதை தொடர்ந்து பார்ப்போம்.

அதாவது 100 ஆண்டுகளில் 4 தடவை பிப்ரவரி மாதத்தில் பௌர்ணமி வருவதே இல்லை. கடந்த நூற்றாண்டில் 1915, 1934, 1961, மற்றும் 1999 ஆகிய ஆண்டுகளில் பிப்ரவரி மாதத்தில் பௌர்ணமி வரவில்லையாம்!!

இந்த நூற்றாண்டில் இது முதல் முறையாக 2018ல் நிகழ்கிறது.

**G. Anushya**
*I B.Sc. Zoology*




வாழ்த்துக்கள்

பல்கலைக்கழகத் தேர்வில்
வெற்றிவாகை சூட
மாணவர்கள் அனைவரையும்
விஞ்ஞானப்பூக்கள் வாழ்த்துகிறது.



அடுத்த பருவத்தில் மலரவிருக்கும்
விஞ்ஞானப்பூக்கள் பத்தாவது இதழுக்கான
புதிய படைப்புகளை புதிய சிந்தனையுடன்
தயாரித்து மலர் பொறுப்பாளர்களிடம்
சமர்ப்பிக்கவும்...

அட்டைப்பட வடிவமைப்பு :
S. Dhana Shunmugam, II B.Sc. (Com Sci)

நன்றி

அச்சுப்பதிப்பு Galaxy Printograph tirunelveli town.

# வாழ்த்துக்கள்



**M. Kumaresan**
B.Sc. (Phy. Edu.)
**University Rank - 1**



**A. Vanitha**
B.Sc. (Physics)
**University Rank - 7**



**A. Balanambi**
B.Sc. (Chemistry)
**University Rank - 10**



**M. Sundar**
B.Sc. (Physics)
**University Rank - 17**

சாதனை படைத்த மாணவர்களை விஞ்ஞானப் பூக்கள்
மலர்க்குழு மனதார வாழ்த்துகிறது.

Rs. 5/-

Scanned with CamScanner